# நிர்வாக அறிக்கை

# 2020 – 2021

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார் – குறள்

நாகப்பட்டினம் நகராட்சி
நிர்வாக அறிக்கை

2020 – 2021

நிர்வாக அமைப்பு

ஆட்சி எல்லை

வரலாற்று புகழ் பெற்றதும் கடற்கரை நகரமாகிய நாகப்பட்டினம் நகராட்சி 24.10.1866ம் நாள் துவக்கப்பட்டு 24–10–1986ம் தேதி முதல், முதல் நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டது. இந்நகராட்சியின் எல்லைக்குள் நாகப்பட்டினம், நாகூர் ஆகிய இரண்டு நகரங்கள் முழுவதும் உள்ளது. இதன் எல்லைக்குள் நாகப்பட்டினம், நாகூர், அந்தனப்பேட்டை, ஆகிய மூன்று வருவாய் கிராமங்கள் உள்ளன. ஒருங்கிணைந்த தஞ்சாவூர் மாவட்டத்தை நாகப்பட்டினம் மாவட்டம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டம் என இரண்டாக பிரிக்கப்பட்டு 19–10–1991 முதல் நாகப்பட்டினத்தை மாவட்ட தலைநகராகக் கொண்டு செயல்பட்டு வந்தது. இதன் பிறகு நாகப்பட்டினம் மாவட்டம் 1–1–1997 முதல் திருவாரூர் மாவட்டம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம் என இரண்டாக பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| இந்நகராட்சியின் எல்லையின் மொத்த பரப்பளவு | : | 14.92 ச.கி.மீ. |
| 1991–ம் ஆண்டு மக்கள் தொகை | : | 86565 |
| 2001–ம் ஆண்டு மக்கள் தொகை | : | 93148 |
| 2011 -ம் ஆண்டு மக்கள் தொகை | : | 102813 |

22–5–98ம் நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 85–ன் படி இந்நகராட்சி தேர்வு நிலை நகராட்சியாக உயர்த்தப்பெற்று, தொடர்ந்து தேர்வு நிலை நகராட்சியாக இயங்கி வருகிறது.

நகர் மன்றம்

01.04.2020 முதல் 31.03.2021 வரை திரு.பி.ஏகராஜ் ஆணையர் அவர்கள் ஆணையாளராகவும் மற்றும் தனி அலுவலராகவும் பணியாற்றியுள்ளார்.

இடவசதி

நகராட்சி அலுவலகம் நகர அளவு எண்.4, பிளாக் எண்.30, சர்வே எண்.1267ல் உள்ள இடத்தில் 1 ஏக்கர் 29377 சதுர அடி பரப்பளவு கொண்ட சொந்த கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

ஆணையாளர் மற்றும் அலுவலர்கள்

01.04.2020 முதல் 31.03.2021 வரை திரு.பி.ஏகராஜ் ஆணையர் அவர்கள் நகராட்சி ஆணையாளராக பணியாற்றியுள்ளார்.

திரு. மா. செல்வராஜ் 01–04–2020 முதல் 06–11–2020 வரை மேலாளராக பணியாற்றி உள்ளார். திருமதி. கோ. மாரிமுத்து உதவியாளர் 07.11.2020 முதல் 31.03.2021 வரை மேலாளர் கூடுதல் பொறுப்பு வகித்துள்ளார்

திருமதி. அ. விஜயலெட்சுமி கணக்கர் 01.04.2020 முதல் 05.06.2020 வரை கணக்கராக பணியாற்றியுள்ளார். திருமதி. க. சசிகலா உதவியாளர் 06.06.2020 முதல் 31.03.2021 வரை கணக்கர் கூடுதல் பொறுப்பு வகித்துள்ளார்.

பணியாளர்கள் (பொதுப்பிரிவு)

அறிக்கையாண்டில் மேலாளர், மேற்பார்வையில் கீழ்க்கண்ட பணியாளர்கள் பணிபுரிந்து வந்தனர்.

1. மேலாளர் –1 (காலியிடம்)
2. கணக்கர்–1 (காலியிடம்)
3. உதவியாளர் – 6
4. இளநிலை உதவியாளர்–14 ( 3 பணியிடம் காலியிடமாக உள்ளது)
5. தட்டச்சர்–1
6. பதிவரை எழுத்தர் – 1
7. அலுவலக உதவியாளர்கள்– 4
8. காவலர் – 3 ( 2 பணியிடம் காலியிடமாக உள்ளது )
9. உதவி திட்ட அமைப்பாளர்–1
10. புள்ளி விபரக்குறிப்பாளர் –1 ( ஒரு பணியிடம் காலியிடமாக உள்ளது )
11. வருவாய் ஆய்வர் – 2 (இரண்டு பணியிடம் காலியாக உள்ளது)
12. வருவாய் உதவியாளர் – 12 (ஐந்து பணியிடம் காலியாக உள்ளது)

நகரமைப்பு பிரிவு

1. நகரமைப்பு அலுவலர் – 1 பணியிடம்
   திரு. ப. முருகானந்தம் நகரமைப்பு அலுவலர் 01.04.2020 முதல் 30.06.2020 வரை ஈட்டிய விடுப்பு மேற்கொண்டுள்ளார். 01.07.2020 முதல் 31.03.2021 வரை நகரமைப்புஅலுவலராக பணியாற்றியுள்ளார்.
2. நகரமைப்பு ஆய்வர் – 2 பணியிடம்
   திரு. க. செல்வம் நகரமைப்பு ஆய்வர் 01.04.2020 முதல் 31.03.2021 வரை பணியாற்றியுள்ளார்.
   திரு. ம. செல்வராஜ் நகரமைப்பு ஆய்வர் 01.04.2020 முதல் 31.03.2021 வரை பணியாற்றியுள்ளார்.

பொது சுகாதாரப்பிரிவு

01.04.2020 முதல் 09.02.2021 வரை மருத்துவர் திரு. டி. பிரபு , எம்.டி., பொது சுகாதாரப் பிரிவில் நகர் நல அலுவலராகவும், மருத்துவர் எ. கண்ணன் எம்.டி 10.02.2021 முதல் 31.03.2021 வரை நகர் நல அலுவலராகவும் பணியாற்றியுள்ளார் .

| | | | |
|---|---|---|---|
| 1 | துப்புரவு ஆய்வர்கள் | : | 4 (2 பணியிடம் காலியாக உள்ளது) |
| 2 | துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் | : | 14 (1 பணியிடம் காலியாக உள்ளது) |
| 3 | ஒட்டுனர்கள் | : | 7 |
| 4 | தூய்மைப்பணியாளர்கள் | : | 92<br>(105பணியிடம் காலியாக உள்ளது) |
| 5 | தூய்மைப் பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் | | 145 பணியாளர்கள் |

**பொறியியல் பிரிவு**

திரு.கா.ரவிச்சந்திரன் நகராட்சிப் பொறியாளர் 01.04.2020 முதல் 10.12.2020 வரை நகராட்சிப் பொறியாளராக பணியாற்றியுள்ளார். திரு. ச. வசந்தன் 11.12.2020 முதல் 31.03.2021 வரை நகராட்சி பொறியாளராக பணியாற்றியுள்ளார்.

திரு.ஆர்.கணபதி வெங்கடேசன் இளநிலை பொறியாளர் 01.04.2020 முதல் 31.03.2021 வரை இளநிலை பொறியாளராக பணியாற்றியுள்ளார் .

இந்நகராட்சி பொறியியல் பிரிவானது பொறியாளர் தலைமையின் கீழ் கீழ்க்கண்ட பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | உதவி பொறியாளர் | : | 1 |

| | | | |
|---|---|---|---|
| 2. | குழாய் ஆய்வர் | : | 1 (1.04.2020 முதல் 31.03.2021 வரை பணியிடம் காலியிடமாக உள்ளது) |
| 3. | மின் பணியாளர் நிலை I | : | 1 (1.04.2020 முதல் 31.03.2021 வரை பணியிடம் காலியிடமாக உள்ளது ) |
| 4. | மின் பணியாளர் நிலை II | : | 1 (13.08.2020 முதல் 31.03.2021 வரை பணியிடம் காலியிடமாக உள்ளது) |
| 5 | பிட்டர் | : | 1 ( 01.04.2020 முதல் 31.03.2021 வரை பணியிடம் காலியாக உள்ளது ) |
| 6. | மின் கம்பியாளர் | : | 2 ( 01.04.2020 முதல் 31.03.2021 வரை ஒரு பணியிடம் காலியாக உள்ளது ) |
| 7. | மின் கம்பி உதவியாளர் | : | 2 ( 01.04.2020 முதல் 31.03.2021 வரை பணியிடம் காலியாக உள்ளது ) |
| 8. | ஒட்டுநர்கள் | : | 3 (01.04.2020 முதல் 31–03–2021 வரை இரண்டு பணியிடம் காலியாக உள்ளது ) |
| 9. | துலக்குநர்கள் | : | 17 ( 7 பணியிடங்கள் காலியாக உள்ளது ) |

பொறியியல் பிரிவு

சாலைகள் , பாலங்கள் கட்டிடங்கள்,

சாலைகள்

இந்நகராட்சி எல்லைக்குள் 148.594 கி.மீட்டர்கள் சாலைகள் உள்ளன. அவற்றில் 25.32 கி.மீட்டர் நீளமுள்ள நெடுஞ்சாலைத்துறையினராலும் 123.274 கி.மீட்டர் நீளமுள்ள சாலைகள் நகராட்சியாலும் பராமரிக்கப்பட்டு வருகின்றது. அவற்றின் விபரங்கள் வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. தார் சாலைகள் | : | 50.163 கி.மீ. |
| 2. கான்கீரிட் சாலைகள் | : | 73.111 கி.மீ. |
| 3. கருங்கல் ஜல்லி சாலைகள் | : | === |
| 4. கிராவல் சாலைகள் | : | === |
| மொத்தம் | : | 123.274 கி.மீ. |

பூங்காக்கள்

அறிக்கையாண்டில் கீழ்க்கண்ட பூங்காக்கள் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| | |
|---|---|
| 1 | இ.ஜி.எஸ்.பிள்ளை பூங்கா |
| 2 | ஆண்டோ சிட்டி பூங்கா |
| 3 | நெய்தல் நகர் பூங்கா |
| 4 | நெய்தல் நகர் பூங்கா |
| 5 | ஆர்.வி.ஜி.நகர் பூங்கா |
| 6 | எம். ஆர்.பி.நகர் பூங்கா |
| 7 | நெய்தல் நகர் பூங்கா –1 |
| 8 | நெய்தல் நகர் பூங்கா –2 |
| 9 | எஸ்.எஸ்.எம்.நகர் பூங்கா |
| 10 | ஏ.டி.ஜெ.அவென்யூ பூங்கா |
| 11 | மறைமலை நகர் |
| 12 | சிவசக்தி நகர் பூங்கா |
| 13 | நெய்தல் நகர் பூங்கா |
| 14 | தம்பிதுரை பூங்கா |
| 15 | கோட்டை வாசல் பூங்கா |
| 16 | கிரசன்ட் பூங்கா |

| | |
|---|---|
| 17 | VIP நகர் பூங்கா |
| 18 | மகாலெட்சுமி நகர் பூங்கா |
| 19 | மாடர்ன நகர் பூங்கா |
| 20 | KCP நகர் பூங்கா |
| 21 | கொடி மர பூங்கா |
| 22 | இளஞ்சேரன் நகர் பூங்கா |
| 23 | மறைமலை நகர் பூங்கா |

பொது நூலகங்கள்

அரசு துறையின் மூலம் நாகப்பட்டினத்தில் ஒன்றும், நாகூரில் ஒன்றும் பொது நூலகங்கள் இயங்கி வருகிறது. நகராட்சியால் நூலகங்கள் பராமரிக்கப்படவில்லை.

தெருவிளக்குகள்

அறிக்கையாண்டில் நகராட்சி பராமரிப்பில் உள்ள மின்விளக்குகள் விபரம் .

| | | |
|---|---|---|
| 1 | 20 வால்ட் எல்.இ.டி | 3314 |
| 2 | 40 வால்ட் எல்.இ.டி | 84 |
| 3 | 50 வால்ட் எல்.இ.டி | 9 |
| 4 | 60 வால்ட் எல்.இ.டி | 21 |
| 5 | சோடியம் ஆவி 250 வால்ட் ஆவி விளக்கு | 562 |
| 6 | 400 வால்ட் சோடியம் ஆவி விளக்கு | 16 |
| 7 | 250 வால்ட் எம்.எச்.எல் | 13 |
| 8 | 400 வால்ட் எம்.எச்.எல் | 222 |
| | மொத்தம் | 4241 |

01–01–2018 முதல் 36 வார்டுகளில் உள்ள தெருவிளக்குகள் பராமரிக்கும் பணிகள் மற்றும் அனைத்து தெருவிளக்குகளை எல். இ. டி. ஆக மாற்றம் செய்திடும் பணிகள் தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டு தனியார் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. சபரி எலக்ட்ரிக்கல் சென்னை நிறுவனம் மூலம் இயக்குதல் மற்றும் பாரமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

<u>அறிக்கையாண்டில் மேற்கண்டுள்ள பிரிவுகளின் நிர்வாக செலவினம் வருமாறு ( 2020–2021)</u>

| | | |
|---|---|---|
| 1 | பொதுப்பிரிவு (கணினிப்பிரிவு உட்பட) | 1,09,32,481.00 |
| 2 | வருவாய் பிரிவு | 33,81,479.00 |
| 3 | சுகாதாரபிரிவு | 5,14,29,544.00 |
| 4 | நகரமைப்பு பிரிவு | 29,60,592.00 |
| 5 | பொறியியல் பிரிவு | 54,96,125.00 |
| 6 | மருத்துவப்பிரிவு (ஐபிபி5) | 18,33,098.00 |
| | மொத்தம் | 7,60,33,319.00 |

பொறிகளும்–கருவிகளும்

கணினி பிரிவிற்கு கீழ்க்கண்ட உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

1. கணினிகள் – 25
2. லேப்டாப் – 4
3. லேசர் பிரிண்டர்கள் – 13
4. டாட் மேட்ரிக்ஸ் – 4
5. லேன் டோர்ட் சுவிட்சஸ் – 5
6. யு.பி.எஸ் – 3
7. Network Provider TNSWAN - 1

**கல்லூரிகள்**

இந்நகராட்சி எல்லைக்குள் அ.து. ஜெயவீரப்பாண்டிய நாடார் மகளிர் கல்லூரி ஒன்றும் இ.ஜி.எஸ். பிள்ளை பொறியியல் மற்றும் கலைக்கல்லூரி ஒன்றும் இயங்கி வருகின்றன.

வலிவலம் தேசிகர் தொழில்நுட்ப கல்லூரி (ஆண்கள்) ஒன்றும் அ.து.ஜெ. மகளிர் தொழில் நுட்ப கல்லூரி (பெண்கள்) ஒன்றும் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் (ஆண்கள்) ஒன்றும் உள்ளன.

கல்வி,பொழுது போக்கு மற்றும் கலாச்சார வசதி

| வ. எண் | விபரம் | நகராட்சி | அரசு மற்றும் அரசு உதவி பெறும் மற்றும் தனியார் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | தொடக்கப்பள்ளி | 11 | 11 | 22 |
| 2 | நடுநிலைப்பள்ளி | 7 | 1 | 8 |
| 3 | மேல்நிலைப்பள்ளி | 2 | 6 | 8 |
| 4 | கலை அறிவியல் கல்லூரி | – | 2 | 2 |
| 5 | பொறியியல் கல்லூரி | – | 1 | 1 |
| 6 | பாலிடெக்னிக் | – | 3 | 3 |
| 7 | ஐ.டீ.ஐ | 1 | – | 1 |
| 8 | முறைசாராகல்வி நிறுவனம் | 1 | – | 1 |
| 9 | ஆதரவற்றோர் இல்லம் | 2 | 2 | 4 |
| 10 | மகளிர் விடுதி | – | 3 | 3 |
| 11 | முதியோர் இல்லங்கள் | – | 1 | 1 |
| 12 | விளையாட்டு மைதானம் | 1 | 4 | 5 |
| 13 | திரையரங்கம் | – | 5 | 5 |
| 14 | சமுதாய கூடம் | – | 1 | 1 |
| 15 | பொது நூலகம் | 2 | – | 2 |

**புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத்திட்டம்**

11 நகராட்சி தொடக்கப் பள்ளிகளிலும் 7 நடுநிலைப்பள்ளியிலும் 2 மேல்நிலைப்பள்ளியிலும் சத்துணவு மையங்கள் பராமரிக்கப்பட்டு 5 வயது முதல் 9 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு சத்துணவு அளிக்கப்பட்டு வருகிறது. மேல்நிலைப்பள்ளிகளில் 10 முதல் 14 வயது வரையுள்ள மாணவர்களுக்கு சத்துணவு அளிக்கப்பட்டு வருகிறது.

நகராட்சி நடுநிலைப்பள்ளி 6 முதல் 8 வகுப்பு முடிய 10 முதல் 12 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு சத்துணவு அளிக்கப்பட்டு வருகிறது. 2020–2021ம் ஆண்டில் நாள் ஒன்றுக்கு 1993 மாணவ/மாணவிகள் (ஆண் – 940, பெண் – 1053) இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்று வருகிறார்கள்.

ஒவ்வொரு பள்ளி மையத்திற்கும் ஒரு சத்துணவு அமைப்பாளரும் ஒரு சமையலரும். ஒரு சமையல் உதவியாளரும் பணிபுரிந்துவருகிறார்கள். இத்திட்டத்திற்கென ஒரு உதவியாளர் மற்றும் கணக்கர் நகராட்சியில் பணிபுரிந்து வருகிறார்.

**பணியாளர்கள் அனுமதிக்கப்பட்ட விபரம்.**

வயது 5 முதல் 9 வயது வரை ( 10 வயது முதல் 14 வயது முடிய )

| வ.எண் | அனுமதிக்கப்பட்ட பணியாளர்கள் | மொத்த பணியிடம் | பணியில் உள்ளோர் | காலிப் பணியிடம் |
|---|---|---|---|---|
| 1 | அமைப்பாளர் | 20 | 11 | 9 |
| 2 | சமையலர் | 20 | 15 | 5 |
| 3 | உதவியாளர் | 20 | 14 | 6 |

இத்திட்டத்தின் கீழ் மாணவர் ஒருவருக்கு கீழ்க்கண்ட விகிதப்படி சத்துணவு பொருட்கள் அளிக்கப்பட்டு வந்தது.

1. அரிசி 150 கிராம்
2. பருப்பு 15 கிராம்
3. எண்ணெய் 3 கிராம்
4. பாசிபயறு 20 கிராம்
5. கொ.கடலை 20 கிராம்
6. உருளை கிழங்கு 40 கிராம்
7. முட்டை 1 ( வாரத்திற்கு 5 நாட்கள் )

அரசாணை நிலை எண். 267 சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை (சஉதி–1) நாள் 02–11–2012–ன்படி அரசு செயலாளர், சமூக நலம் மற்றும் சத்துணவுத்திட்டத்துறை, சென்னை கடித எண். 10345/SW/ 4–3 /2014, நாள் 20–08–2014 மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியரின் கடித எண். 1025/சஉதி/2012, நாள் 12–09–2014–ன்படி நாகப்பட்டினம் நகராட்சி பள்ளிகளில் சத்துணவு உண்ணும் மாணவர்களுக்கு கலவை சாதம் வழங்கிட அறிவுரை வழங்கப்பட்டு இந்நகராட்சி சத்துணவு அமைப்பாளர்கள், சமையலர்கள், மற்றும் உதவியாளர்களுக்கும் 03–09–2014–ம் தேதி நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பயிற்சி வழங்கப்பட்டது.

அதன்படி 16–09–2014–ம் தேதி முதல் நகராட்சி பள்ளிகளில் சத்துணவு உண்ணும் மாணவ, மாணவியர்களுக்கு தினசரி கீழ்க்கண்ட விபரப்படி கலவை உணவுகள் வழங்கப்பட்டு வருகிறது.

<u>கலவை உணவு விபரம்,</u>

| கிழமை | முதல் மற்றும் மூன்றாவது வாரம் | இரண்டாவது மற்றும் நான்காவது வாரம் |
|---|---|---|
| திங்கட் கிழமை | வெஜிடேபிள் பிரியாணி, மிளகு முட்டை | பிசிபேளாபாத், வெங்காயம் தக்காளி முட்டை மசாலா |
| செவ்வாய்கிழமை | கொண்டைக்கடலை, புலாவு, தக்காளி மசாலா முட்டை | மிக்சர்ட் மில் மேக்கர்(ம) காய்கறிகள் சாதம், மிளகு முட்டை |
| புதன் கிழமை | தக்காளி சாதம், மிளகு முட்டை | புளிசாதம் தக்காளி மசாலா முட்டை |
| வியாழக்கிழமை | சாம்பார் சாதம், சாதா முட்டை | எலுமிச்சம்பழம் சாதம், மசாலா முட்டை |
| வெள்ளிக்கிழமை | கறிவேப்பிலை சாதம் (அ) கீரைசாதம் உருளைகிழங்கு, தக்காளி சேர்த்து வேகவைத்த முட்டை | சாம்பார்சாதம், வேகவைத்த முட்டை, வறுத்த உருளைக்கிழங்கு) |

மேற்கண்டவாறு கலவை உணவு வழங்கப்படுவதற்கு அரசு ஆணை (நிலை) எண்.49, சமூக நலம் (ம) சத்துணவு திட்டத்துறை (ச.உ.தி–1) நாள் 17–4–2013–ன்படி உணவூட்டுச்செலவினங்கள் கீழ்க்கண்டவாறு உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

| வயது | பருப்பு பயன்படுத்தும் நாட்களுக்குரிய செலவினம் | பருப்பு பயன்படுத்தாத நாட்களுக்குரிய செலவினம் |
|---|---|---|
| (5+9 வரை) 0 முதல் வகுப்பு | 1.30 காசுகள் | 1.70 காசுகள் |
| 6 முதல் 10 வகுப்பு (10+14 வரை) | 1.40 காசுகள் | 1.80 காசுகள் |

நாகப்பட்டினம் கூடுதல் உதவி தொடக்கக்கல்வி அலுவலரின் கடிதம் எண். 1255/10/அ1, நாள் 29/7/2010–ன் படி நாகப்பட்டினம் டாடா நகர் சுனாமி குடியிருப்பு பகுதியில் புதியதாக கட்டப்பட்ட துவக்கப்பள்ளி வார்டு 35ல் அமைந்துள்ளதால் நகராட்சி தொடக்கப்பள்ளி , டாடா சுனாமி குடியிருப்பு , நாகப்பட்டினம் என்ற பெயரில் இயங்கி வருகிறது என்றும் , அப்பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு சத்துணவு வழங்கிடவும் தெரிவிக்கப்பட்டது. அதன்படி அப்பள்ளி நகர் மன்ற தீர்மான எண். 302 நாள் 15.11.2010–ன்படி நகராட்சி பள்ளியாக ஏற்கபட்டு 01.05.2011 முதல் நகராட்சியின் மூலம் சத்துணவு வழங்கப்படுகிறது.

மேற்கண்ட சத்துணவு பணியாளர்களுக்கு அரசாணை எண்.234 நிதி (ஊதியப்பிரிவு) துறை நாள் 1–6–2009–ன்படி 6–வது ஊதியக்குழு நிர்ணயத்தின்படி ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு அரசாணை (டி) எண். 3 சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை (என்எம்பி2) நாள் 23–4–2012–ன்படி நாகப்பட்டினம் மாவட்ட கருவூலத்தின் மூலம் ஜுலை 2012 முதல் ஊதியம் மற்றும் ஒய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. உணவூட்டு செலவினங்கள் மாவட்ட ஆட்சியரின் செயல்முறை உத்திரவு எண். 444/2017/சஉதி, நாள் 18–7–17, 21–8–17, 21–12–17, 14–3–18–ன்படி சத்துணவு மான்யம் பெறப்பட்டு உணவூட்டு

செலவினங்கள் வழங்கப்படுகிறது. இம்மான்யம் நகராட்சி கருவூல பொது நிதிக்கு வரவு வைக்கப்பட்டு, அன்பின் மான்யத்தொகை சத்துணவு கணக்கிற்கு மாற்றம் செய்யப்படுகிறது.

அரசாணை எண். 303 நிதி (ஊதியப்பிரிவு)த்துறை நாள் 11–10–2017, அரசாணைஎண்.305 நிதி ( ஊதியப்பிரிவு ) துறை நாள் 13–10–2017 மற்றும் அரசாணை எண்.307 நிதி ( ஊதியப்பிரிவு ) துறை நாள் 13–10–2017 –ன்படி கீழ்க்கண்டவாறு ஊதியம் மறு நிர்ணயம் செய்து அக்டோபர் –2017ம் மாதம் முதல் வழங்கப்படுகிறது.

| வ.எண் | பணியிடங்கள் விவரம் | ஊதிய விகிதம் |
|---|---|---|
| 1 | அமைப்பாளர் | 7700–24200 |
| 2 | சமையலர் | 4100–12500 |
| 3 | சமையலரின் உதவியாளர் | 3000–9000 |

<u>பொது நலம் மருத்துவ வசதி</u>

நகராட்சி எல்லைக்குள் நகராட்சி புதிய பேருந்து நிலையம் எதிரில் நாகப்பட்டினம் மாவட்ட அரசினர் தலைமை மருத்துவமனை உள்ளது. இது நகரின் நடுவில் அமைந்துள்ளது, அறிக்கையாண்டில் பொது மக்களின் மருத்துவத் தேவைக்காக கீழ்காணும் மருத்துவமனைகள் பயன்படுத்தப்பட்டு வந்தன.

1) அரசினர் மகளிர் மாவட்ட குழந்தைகள் மருத்துவமனை, நாகப்பட்டினம்.
2) அரசினர் மருத்துவமனை, நாகூர்.
3) மாநில தொழிலாளர் காப்பீட்டு மருத்துவமனை,நாகப்பட்டினம்.
4) காசநோய் மருத்துவமனை நாகப்பட்டினம்.

இவைத் தவிர தனியார்களால் மருத்துவமனைகள் நடத்தப்பட்டு வந்தன. அறிக்கையாண்டில் மருத்துவமனை எதற்கும் மன்றத்தின் நிதியிலிருந்து நன்கொடை வழங்கப்படவில்லை.

<u>பொது சுகாதாரம்</u>

நகராட்சி பொது சுகாதாரத்தினை பேணிக்காத்திட 2 துப்புரவு ஆய்வர்கள் 13 துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் 92 தூய்மைப் பணியாளர்கள் மற்றும் 7 ஓட்டுநர்கள் அறிக்கையாண்டில் பணியாற்றியுள்ளனர். 21 பொதுக்கழிப்பிடங்கள் உபயோகத்தில் இருந்து வந்தது. துப்புரவு பணிகள் மேற்கொள்ள நகரம் நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு பொது சுகாதாரப்பணிகள் செயல்படுத்தப்பட்டன.

அறிக்கையாண்டில் கீழ்க்கண்டுள்ள வாகனங்கள் தூய்மைப் பணிக்காக உபயோகத்தில் இருந்து வந்தது.

1. கழிவு நீர் அகற்றும் லாரி 1
2. டிப்பர் லாரி 4
3. ஜெட்ராடிங் வாகனம் 1
4. காம்பெக்டர் 2
5. டாடா ஏசி 9
6. நாய் பிடிக்கும் வாகனம் 1

மொத்த வாகனங்கள் 17

<u>உரக்கிடங்கு</u>

நாகப்பட்டினம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் நாகப்பட்டினம் E.B.Bikara அருகில் 11.67 ஏக்கர் நில பரப்பளவில் உரக்கிடங்கு ஒன்றும் , நாகூர் வெட்டாறு அருகில் 1 ஏக்கர் நில பரப்பளவில் உரக்கிடங்கு ஒன்றும் மற்றும் நாகப்பட்டினம் அரசு தலைமை மருத்துவமனை பின்புறம் (கூக்ஸ் ரோடு) 1.5. ஏக்கர் நிலப்பரப்பளவில் நுண்ணுயிர் உரக்கிடங்கு (Micro Compost yaurd) ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம் மூன்று உரங்கிடங்குகள் பயன்பாட்டில் இருந்துவருகிறது.

கலவை உரம் தயாரிப்பு

நாகப்பட்டினம் நகராட்சியில் 2020–2021–ஆம் ஆண்டில் ஆணையாளரின் மேற்பார்வையில் 36 வார்டுகளில் உள்ள 24781 குடியிருப்பு பகுதிகள் அடங்கிய 631 தெருக்களில் சேகரமாகும் கழிவுகளை ஆறு குப்பை ஏற்றும் வாகனங்கள் மூலம் சுமார் 32 மெட்ரிக் டன் கழிவுகள் உரக்கிடங்கிற்கு தினமும்

எடுத்துச் செல்லப்பட்டு வருகிறது . மேற்படி கொட்டப்படும் குப்பைகளை துப்புரவு பணியாளர்களால் சமன்படுத்தப்பட்டு, நெகிழி கழிவுகளை மறு சுழற்சிக்காக அவ்வப்போது அரியலூர் சிமெண்ட் ஆலைக்கு அனுப்பப்படுகிறது.

ஆரம்ப நிலை சேகரிப்பு

நாகப்பட்டினம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை 100% செம்மையாக செயல்டுத்திட போதுமான துப்புரவு பணியாளர்கள் இல்லாத நிலையை நகராட்சி நிர்வாக ஆணையரின் கவனத்திற்கு கொண்டு சென்றதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை –5 அவர்களது கடிதம் எண். 25865/பி3/13 நாள் 20–07–2013ம் நாளிட்ட கடிதத்தில் அரசாணை எண். 101 , நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 30–4–1997ல் வகுக்கப்பட்டுள்ள நெறிமுறைகளின்படி தேவையான 223 வெளிப்பணியாளர்களை கொண்டு ( OUT SOURCING ) மாவட்ட ஆட்சியரின் தினக்கூலி விலை விகிதத்தின்படி ஒப்பந்தப்புள்ளி வழங்கும் ஒப்பந்ததாரருக்கு நகர் மன்ற அனுமதி பெற்று உத்திரவு வழங்கிட தெரிவிக்கப்பட்டு, இந்நகர் மன்றத்தீர்மான எண். 210 நாள்.31–03–2020–ல் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் நகர் மன்றத் தீர்மான எண். 223, நாள் 30–04–2020 அனுமதியின்படி இந்நகராட்சி 36 வார்டுகளில் தூய்மை பணி மேற்கொள்ளும் பணிக்கு 145 தினக்கூலி ஒப்பந்த பணியாளர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்குரிய ஆண்டு செலவினம் ரூ.2,07,34,560/–லட்சம் கணக்கிடப்பட்டு இத்தொகைக்கு மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. உரக்கிடங்கில் புல்டோசர் வைத்து சமன்படுத்தி மக்கும் குப்பை, மக்கா குப்பை பிரித்தெடுத்து மக்கும் குப்பைகளில் உரம் தயாரிக்கும் பணி நடைபெறுகிறது. மறுசுழற்சிக்கு பயன்படும் பிளாஸ்டிக் போன்ற கழிவுகள் ஒவ்வொரு புதன்கிழமையும் சேகரித்து விற்பனை செய்யப்பட்டதற்கான தொகை தூய்மை பணியாளர்களுக்கு சமமாக பிரித்து வழங்கப்படுகிறது.

உணவு கலப்பட தடுப்புச்சட்டம்

அறிக்கையாண்டில் உணவு மாதிரி எடுக்கும் உணவு ஆய்வர் இல்லாததால் உணவு மாதிரிகள் எடுக்கப்படவில்லை. அச்ச அருவருக்கத் தக்க தொழில் இனங்களுக்கும் வியாபாரிகளுக்கும் வழக்கம் போல் நிபந்தனைகள் விதிக்கப்பெற்று உரிமையாணைகள் வழங்கப்பட்டன.

சீருடைகள் இயங்கும் திட்டம்.

2020–2021ம் ஆண்டு அறிக்கையாண்டில் நகராட்சியில் பணிபுரியும் 92 தூய்மை பணியாளர்களுக்கும், பொதுப்பிரிவில் பணிபுரியும் அலுவலக உதவியாளர்களுக்கும், குடிநீர் பிரிவில் பணிபுரியும் துலக்குநர்களுக்கும், பொதுசுகாதார துப்புரவுபணி மேற்பார்வையாளர்களுக்கும் சீரூடைகள் வழங்கப்பட்டுள்ளது.

நகர் நல வாழ்வு நிலையங்களின் செயல்பாடுகள்( 2020–2021)

இந்நகராட்சியில் மருந்து கொத்தளம் நகர் நல வாழ்வு நிலையம், நாகப்பட்டினத்திலும் நாகூரில் தர்கா குளம் வடகரையில் ஒரு நகர் நல வாழ்வு நிலையம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. நகராட்சியில் மகப்பேறு மருத்துவமனை எதுவும் பராமரிக்கப்படவில்லை

டாக்டர்.ஆர்.தமிழ்செல்வி,எம்பிபிஎஸ்.,டிஜிஓ, மருத்துவ அலுவலர் ஆகியோர் பணியாற்றி வருகிறார்கள். இந்நகர நலவாழ்வு நிலையங்களில் கீழ்க்கண்ட பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

1. மருத்துவ அலுவலர் (பெண்) 2 (ஒரு பணியிடம் காலியாக உள்ளது)
2. பகுதி சுகாதார செவிலியர் (பெண்) 2 (இரண்டு பணியிடம் காலியாக உள்ளது)
3. நகர சுகாதார செவிலியர்கள் (பெண்) 11(ஒன்பது பணியிடம் காலியாக உள்ளது)
4. அலுவலக உதவியாளர்கள் (பெண்) 2 ( இரண்டு பணியிடம் காலியாக உள்ளது)

2020–2021ம் ஆண்டிற்கு நகர சுகாதார செவிலியர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டுள்ளது.

<u>மான்யம்</u>

ஐபிபி5 நகர நல வாழ்வு நிலையப் பணியாளர்களுக்கு 23.7.1993 முதல் 31.8.1998 வரையுள்ள காலத்திற்கான மான்யம் ஐபிபி5 நிதியிலிருந்து சம்பளம் மற்றும் மருந்துபொருட்கள் வழங்கப்பட்டு வந்தன. தற்போது அரசாணை எண் 136 குடிநீர் வழங்கு துறை நாள்.31.03.2001–ன்படி 2:1 என்ற விகிதத்தில் நகராட்சி பொது நிதியிலிருந்து பணியாளர்கள் சம்பளம் மற்றும் இதர செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2/3அரசு மான்யத்திலும் சம்பளம் மற்றும் இதர செலவினங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

<u>செயல்பாடுகள்</u>

இந்நகராட்சியில் நகர்ப்புறங்களில் உள்ள குடிசைவாழ் பகுதியில் வாழும் மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் ஏற்படுத்தப்பட்டு அங்குள்ள கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் 0+5 வயதுள்ள குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து முதலாக ஐந்து வகை தடுப்பு மருந்துகள் உரிய நேரத்தில் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் குடும்ப நல மருத்துவ முகாம் போலியோ சொட்டு மருந்து முகாம் மற்றும் யானைக்கால் நோய் தடுப்பு மாத்திரைகள் ஆண்டு தோறும் மேற்படி பணியாளர்களால் இந்நகராட்சி மூலம் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. தகுதி வாய்ந்த தம்பதிகளுக்கு குடும்ப நல அறுவை சிகிச்சை செய்ய ஊக்குவித்து தற்காலிக மற்றும் நிரந்தர முறையை பின்பற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கொள்ளை நோய் பரவும் சமயத்தில் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. மேலும் நாகூர் ஆண்டவர் கந்தூரி திருவிழா காலங்களில் வரும் யாத்ரிகர்களுக்கு மருத்துவ முகாம் அமைக்கப்பட்டு சிறப்பு மருத்துவப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், தொற்று நோய்கள் வராமல் இருப்பதற்கு நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித்திட்டத்தின் கீழ் 1331 கர்ப்பிணி தாய்மார்களுக்கு மகப்பேறு உதவித்தொகை ரூ. 23,96,000 /–லட்சம் மட்டும் வழங்கப்பட்டுள்ளது.

இரண்டு நகர் நல மையங்களிலும் தொற்றா நோய் திட்டம் ( NCD SCHEME ) மூலம் 772 பயனாளிகளுக்கு சர்க்கரை நோய் மற்றும் இரத்த அழுத்தம் தொடர்பான நோய்களுக்கு 2 செவிலியர்கள் மூலம் நகரப் பகுதி மக்களுக்கு சிகிச்சை அளித்து வரப்படுகிறது. தற்காலிகம் மற்றும் நிரந்தரமாக குடும்ப நல அறுவை சிகிச்சை மூலம் பயனடைந்தவர்கள் விவரம்

| வ.எண் | நிரந்தரம் | | தற்காலிகம் | |
|---|---|---|---|---|
| 1 | PS | 209 | IUD | 206 |
| 2 | | | ORS | 304 |
| 3 | | | CENTCHROMAN TABLETS | 133 |
| 4 | | | INI ANTARADOS | 15 |
| 5 | | | CC | 110 |

பிறப்பும், மகப்பேறு வசதிகளும்

அறிக்கையாண்டில் பதிவான பிறப்புகள் 1886 மற்றும் இறப்புகள் 561 ஆகும் அறிக்கையாண்டில் 1 பெண் மருத்துவ அலுவலரும் 2 நகர சுகாதார செவிலியர்களும் பணிபுரிந்து வந்தனர்.

தடுப்பூசி போடப்பட்ட விபரங்கள் (2020–2021)

| வ.எண் | விபரம் | இலக்கு | சாதனை | சதவீதம் % |
|---|---|---|---|---|
| 1 | பெண்டவனன் | 3507 | 3507 | 100% |
| 2 | போலியோ | 4676 | 4676 | 100% |
| 3 | போலியோ ஊசி | 2338 | 2338 | 100% |
| 4 | பி.சி.ஜி. | 1169 | 1169 | 100% |
| 5 | டி.பி.டி. | 1111 | 1111 | 100% |
| 6 | M R Vaccine | 2438 | 2438 | 100% |
| 7 | டி.டி. 10 வயது<br>16 வயது | 1628<br>1277 | 1628<br>1277 | 100% |
| 8 | டீடீ எனன்சி | 2502 | 2502 | 100% |
| 9 | டி பி.டி. 5 வயது | 1240 | 1240 | 100% |
| 10 | ஆர்.வி.வி. | 3535 | 3535 | 100% |

இறப்பும் தொற்று நோய்களும்

அறிக்கையாண்டில் காலரா நோய் போன்ற தொற்று நோய்களால் யாரும் மரணம் அடையவில்லை. தொற்று நோய் பரவாமல் தடுக்க எல்லா சுகாதார ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

அறிக்கையாண்டில் டெங்கு காய்ச்சல் நோய் நகராட்சிப்பகுதிகளில் கண்டறியப்பட்டு அதனை போர்க்கால அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நோயினை கட்டுப்படுத்தப்பட்டது. இதற்கென 21 புதிய புகை தெளிப்பான் இயந்திரங்கள் வாங்கப்பட்டு நகரின் அனைத்து பகுதிகளுக்கும் (36 வார்டுகளிலும்) புகை மருந்துகள் தொடர்ந்து அடிக்கப்பட்டது.

தேசிய குடற்புழு தினம் 15.03.2021 , 18.03.2021, 19.03.2021, 20.03.2021, 22.03.2021, 25.03.2021, 26,03,2021 மற்றும் 27.03.2021 ஆகிய நாட்களில் நடைபெற்றது. இத்தினத்தில் பள்ளிக்குழந்தைகளுக்கு பூச்சி மாத்திரை 45014 மாத்திரைகள் மட்டும் வழங்கப்பட்டுள்ளது.

நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட நாகூர் மற்றும் நாகப்பட்டினம் பகுதிகளில் அனைத்து பகுதிகளிலும் கொசு மருந்துகள் தெளிக்கப்பட்டு வருகிறது.

தேசிய போலியோசொட்டு மருந்து திட்டம் 31.01.2021

பொது சுகாதாரத் திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் 0 + 5 வயது குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டு வருகிறது. 2020–2021-ம் ஆண்டில் 11184 குழந்தைகள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டு 11184 குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டது. மேற்படி முகாம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் ஆரம்பித்து நடத்தப்பட்டது.

NATIONAL PULSE POLIO PROGRAMME ACHIEVEMENT 31-01-2021

| Name of the Municipality | Target Children 0-5 years | Achivement | percentage % |
|---|---|---|---|
| Nagapattinam | 11184 | 11184 | 100% |

**விழாக்களும் உற்சவங்களும்**

கொரோனா –19 தொற்று நோய் காரணமாக தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட 144 தடை உத்தரவின் பேரில் கொரோனா தடுப்பு முன்னெச்சறிக்கை பணியின் கீழ் முகக்கவசம் மற்றும் சமூக இடைவெளி (தனி நபர் இடைவெளி) கடைபிடிக்கப்பட்டு பொதுமக்கள் அதிகம் கூடாத நிலையில் இந்நகராட்சி எல்லையில் உள்ள நாகூர் தர்காவில் கந்தூரி திருவிழா 14.01.2021 முதல் 27.01.2021 முடிய நடைபெற்றது. விழாவின் சிறப்பு நிகழ்ச்சியான சந்தனக்கூடு உற்சவம் 23.01.2021ல் நடைபெற்றது. இவ்விழாவிற்கு வருகை தரும் பொதுமக்களுக்கும் யாத்ரீகர்களுக்கும் கூடுதல் சுகாதார வசதிகள் நகராட்சியால் செய்து தரப்பட்டது. இத்திருவிழாவிற்கு நகராட்சி பொது நிதியிலிருந்து ரூ.20,38,000/– மட்டும் செலவிடப்பட்டது. இச்செலவினத்தில் 50% பங்குத்தொகையாக நாகூர் தர்கா டிரஸ்டி மேனேஜ்மெண்ட்டிடம் இருந்து ரூ.10,19,000/– மட்டும் பெறப்பட்டுள்ளது.

கொரோனா 19 தொற்று நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை 2020-2021

நாகப்பட்டினம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் தேசிய பேரிடர் மேலாண்மை இயக்குநர் மற்றும் தமிழக அரசின் கொரோனா தொற்று நோய் முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர்பாக வழிகாட்டு நெறிமுறைகளின்படி, கடந்த 20.03.2020 முதல் தமிழக அரசின் 144முழு ஊரடங்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அவ்வாறு 144தடை உத்தரவு அமுலில் உள்ள நாட்களில் பொதுமக்களுக்கும் பொதுசுகாதாரத்திற்கும் நன்மை பயக்கும் வகையில் கொரோனா தொற்று நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இந்நகராட்சியின் நகர்நல அலுவலரின் தலைமையின் கீழ் துப்புரவு ஆய்வாளர்களை கொண்டு பொறுப்பாளர்கள் நியமனம் செய்து சுகாதாரப்பணி மற்றும் கொரோனா தொற்று முன்னெச்சரிக்கை நடவடிக்கை பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் மாவட்ட ஆட்சித்தலைவரின் ஆய்வுக்கூட்ட நடவடிக்கைகள் நாள்.24.03.2020–ன் படி, இந்நகராட்சியின் நகர்நல அலுவலர் தலைமையில் துப்புரவு ஆய்வாளர் மற்றும் துப்புரவுப்பணி மேற்பார்வையாளர்களை கொண்டு வெளிநாடு மற்றும் வெளிமாநிலத்திலிருந்து நாகப்பட்டினம் நகர பகுதிக்கு வந்துள்ள பயணிகள் மற்றும் பொதுமக்களை அடையாளம் கண்டு அவர்களை தனிமைப்படுத்தப்பட்டது. தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு நகராட்சியின் பராமரிப்பின் கீழ் உள்ள இரண்டு அம்மா உணவகங்களில் உணவு தயாரிக்கப்பட்டு மூன்று வேலை சுமார் 65 நாட்களுக்கு உணவுகள் வழங்கப்பட்டது.

பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு இந்நகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களைக் கொண்டு 24மணி நேரமும் சுழற்சி முறையில் பணி புரிவதற்கு ஆணையிடப்பட்டு அதன்படி, பணிகள் சிறப்பான முறையில் நடைப்பெற்றது.

மேலும் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தொற்று தடுப்பு முன்னெச்சரிக்கை பணிகளை மேற்கொள்ளும் சுமார் 500 உள் மற்றும் வெளிப்புற பணியாளர்களுக்கு பணியின் போது காலை மற்றும் மாலை வேலைகளில் தனியார் நிறுவனத்திடமிருந்து பிஸ்கட் மற்றும் தண்ணீர் பாட்டில் பெற்று அவ்வப்போது வழங்கப்பட்டது.

இந்நகராட்சி பகுதிகளில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டு 3 நபர்களுக்கு மேல் தனிமைப்படுத்தப்பட்டவர்களின் தெருக்களில் பொதுமக்கள் பிரவேசிக்க தடை செய்யப்பட்டு அப்பகுதி தடைசெய்யப்பட்ட பகுதியாக (Containment Area) அறிவிக்கப்பட்டது. தடை செய்யப்பட்ட பகுதிகளில் கிருமி நாசினி மற்றும் Fogging Machine கொண்டு காலை மாலை என இரு வேளைகளிலும் சுத்தம் செய்யப்பட்டது. தடை செய்யப்பட்ட பகுதியில் கொரோனா ஊர்ஜிதம் செய்யப்பட்ட வீடுகளில் மஞ்சள் நிற அட்டை ஒட்டப்பட்டது. பாதிக்கப்பட்ட வீடுகளில் உள்ள மற்ற நபர்களுக்கு கொரோனா பரிசோதனை (Corona Test) செய்யப்பட்டது.

தனிமைப்படுத்தப்பட்ட வீடுகளில் சேகரிக்கப்படுகின்ற கையுரைகள்,முககவசங்கள் மற்றும் திடக்கழிவு ஆகியவற்றை கழிவு நீக்கம் செய்ய தூய்மைப்பணியாளர்கள் முழுபாதுகாப்பு கவச பிரத்யேக உடை அணிந்து சென்று பேட்டரி ஆப்ரேட்டர் வாகனம் மூலம் மஞ்சள் நிற பைகளில் சேகரிக்கப்பட்டு அதனை பாதுகாப்பாக மூடப்படும் வகையில் உள்ள தொட்டியில் வைத்திருந்து தூய்மைப்பணியாளர்களிடம் அன்றாடம் கொடுப்பதற்கு தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. சேகரிக்கப்படுகிற முககவசங்கள், கையுரைகள் மற்றும் திடக்கழிவுகளை அங்கீகரிக்கப்பட்ட எரியூட்டும் நிலையத்திற்கு நேரடியாக தனியாக கொரோனா பணிக்காக நிர்ணயம் செய்யப்பட்ட வாகனத்தில் அன்றாடம் அனுப்பப்பட்டது. அப்பணிக்காக பயன்படுத்தப்பட்ட வாகனங்களை கிருமி நாசினி கொண்டு அவ்வப்போது சுத்தம் செய்யப்பட்டது.

கொரோனா தொற்று பாதிக்கப்பட்டு இறந்தவர்களை நகராட்சி தூய்மைப்பணியாளர்களைக் கொண்டு முழுபாதுகாப்புடன் எரியூட்டும் மைதானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. நல்லடக்கம் செய்யப்பட்ட எரியூட்டும் மைதானத்தில் கிருமி நாசினி மற்றும் பிளீச்சிங் பவுடர் பயன்படுத்தப்பட்டது.

இந்நகராட்சியில் பணிபுரியும் தூய்மைப்பணியாளர்கள் மற்றும் ஒப்பந்தப்பணி தூய்மைப்பணியாளர்களுக்கு தனியார் தொண்டு நிறுவனத்தின் மூலம் அவ்வப்போது அரிசி, சக்கரை, மளிகை பெருட்கள் மற்றும் காய்கறிகள் ஒவ்வொரு பணியாளர்களுக்கும் தனித்தனியாக

வழங்கப்பட்டது. கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்ட வார்டுகளில் நகராட்சி வாகனம் மூலம் தடைசெய்யப்பட்ட நாள்முதல் தடை நீக்கம் செய்யப்பட்ட நாள் வரை பொதுமக்களுக்கு தேவையான காய்கறிகள் மற்றும் பழ வகைகள் வீடு தேடி சென்று விநியோகம் செய்யப்பட்டது.

இந்நகராட்சி கொரோனா தொற்று முன்னெச்சரிக்கை பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையரின் செயல்முறை ஆணையின்படி, இந்நகராட்சிக்கு ரூ. 60.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதில் பாதுகாப்பு பணிக்கு தேவையான முகக்கவசம், கையுரை, பிபி கிட், லைசால், சோடியம் ஹைபோ குளோரைட், லிக்யூடு குளோரின், பிளிச்சிங் பவுடர், நீர்த்த சுண்ணாம்பு, ஸ்பிரே மெஷின் மற்றும் சிறப்பு கையுரை போன்ற பொருட்கள் அவ்வப்போது தேவைக்கேற்ப தருவித்துக்கொள்ளப்பட்டது. நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி, கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை பணிக்காக ரூ.6.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதில் வெளிமாநிலங்களில் வந்து தனிமைப்படுத்தப்பட்ட பொதுமக்களுக்கு தேவையான அன்றாட பொருட்கள் மற்றும் உணவுப்பொருட்களுக்காக இத்தொகை செலவிடப்பட்டது.

**பாதுக்காக்கப்பட்ட குடிநீர் திட்டம்**

அறிக்கையாண்டில் இந்நகராட்சியில் 286 கைப்பிடிப்பம்புகளும் பொது குழாய்கள் 660 எண்ணிக்கையும் உள்ளன. பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ரூ. 893.00 லட்சத்தில் அனுமதிக்கப்பட்ட குடிநீர் அபிவிருத்தித்திட்டத்தின் மூலமும் நாகப்பட்டினம், ஓடாச்சேரி தலைமை நீரேற்று நிலையத்தின் மூலமும் நகர மக்களின் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்து வரப்பட்டது. இந்நகர் நாகப்பட்டினம் பகுதியில் கீழ்க்கண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

| வ.எண் | மேல்நிலை நீர் தேக்க தொட்டி விவரம் | கொள்ளவு லட்சம் லிட்டர் |
|---|---|---|
| 1 | வண்டிப்பேட்டை நீர்தேக்கத்தொட்டி | 9.00 |
| 2 | பட்டினச்சேரி நீர்தேக்கத்தொட்டி | 3.00 |
| 3 | பால்பண்ணைச்சேரி நீர் தேக்கத்தொட்டி | 4.50 |
| 4 | சாமந்தான்பேட்டை நீர் தேக்கத்தொட்டி | 3.00 |
| 5 | புதிய நம்பியார் நகர் நீர் தேக்கத்தொட்டி | 2.50 |
| 6 | நம்பியார் நகர் நீர் தேக்கத்தொட்டி | 3.00 |
| 7 | வெளிப்பாளையம் பழைய நீர் தேக்க தொட்டி | 9.50 |
| 8 | வெளிப்பாளையம் புதிய நீர் தேக்க தொட்டி | 6.00 |
| 9 | சாலமன் பார்க் நீர் தேக்க தொட்டி | 20.00 |
| 10 | டாடா நகர் நீர் தேக்கத்தொட்டி | 2.50 |
| 11 | சேவாபாரதி நீர் தேக்கத்தொட்டி | 5.00 |
| 12 | சி.எஸ்.ஐ நீர் தேக்கத்தொட்டி | 2.50 |
| 13 | அக்கரைகுளம் நீர் தேக்கத்தொட்டி | 2.50 |
| | மொத்தம் | 73.00 |

மேற்கண்ட 13 குடிநீர் மேல்நிலை தொட்டிகளின் மூலம் தினசரி காலையில் 2 மணி நேரம் குடிநீர் வழங்கப்பட்டு நாள் ஒன்றுக்கு 73.00 லட்சம் லிட்டர்கள் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 2020–2021ம் ஆண்டில் குடிநீர் இணைப்புகளின் எண்ணிக்கை 9052 ஆகும். அறிக்கையாண்டில் 232 எண்ணிக்கையில் புதிய குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டு குடிநீர் குழாய் வீட்டு இணைப்புகள் வழங்கப்பட்டு வருகிறது.

<u>தேசிய நகர்புற வாழ்வாதாரத் திட்டம் (NULM)</u>

அறிக்கையாண்டில் SJSRY திட்டத்திற்கு பதிலாக தேசிய நகர்புற வாழ்வாதாரத்திட்டம் துவக்கப்பட்டு அத்திட்டத்தில் கீழ்க்கண்ட தலைப்புகளின் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 1 | EST&P | **வேலை வாயப்புடன் கூடிய திறன் மேம்பாட்டு பயிற்சி** |
| 2 | SEP | **சுய வேலை வாயப்பு** |
| 3 | SUH | **நகர்ப்புற வீடற்றவர்களுக்கு வசதிகள் ஏற்படுத்துதல்** |
| 4 | SUSV | **நகர்ப்புற சாலையோர வியபாரிகளுக்கு வசதிகள் ஏற்படுத்துதல்** |

நகர்புற சாலையோர வியாபாரிகளுக்கு கொரோனரி நிவாரண நிதியாக ரூ. 14.38 லட்சம் பெறப்பட்டு 719 பயனாளிகளுக்கு தொகை வழங்கப்பட்டுள்ளது.

அம்மா உணவகங்கள் :–

அரசாணை எண். 79 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ( மாநஉ) துறை நாள் 31–05–2013 சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரின் நே.மு.கடிதம் எண். 11521/2012 MCA3 நாள் 05–06–2014–ன்படியும் அரசாணை நிலை எண். 118 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந) துறை நாள் 26–09–2014 மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க..எண்.10387/2014/எம்2, நாள் :23–05–2015–ன்படி நாகப்பட்டினம் நகராட்சி பகுதியில் அரசு தலைமை மருத்துவமனை வளாகம் மற்றும் நாகப்பட்டினம் புதிய பேருந்து நிலையம் அருகிலும் இரண்டு அம்மா உணவகங்கள் கட்டப்பட்டு அவைகள் 25–05–2015 –ம் தேதி முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இரண்டு அம்மா உணவகங்களிலும் தினசரி காலை 1200 இட்லிகளும் மதியம் 300 சாம்பார்சாதம் (ம) தயிர் சாதம் தயார் செய்யப்பட்டு அவைகள் கீழ்க்கண்டவாறு விற்பனை செய்யப்படுகிறது.

1 இட்லி 1ரூ வீதம் 1200 இட்லிகள் 1200 ரூபாயும் சாம்பார் சாதம் 1 ரூ.5/– வீதம் 300 சாம்பார் சாதங்களும் தயிர்சாதம் 1 ரூ.3/– வீதம் தயிர் சாதங்களும் ஒரு நாள் விற்பனையாக ரூ.7600/– விற்பனை செய்யப்படுகிறது.

இரண்டு அம்மா உணவகங்களும் 01–04–2020 முதல் 31–03–2021 முடிய உணவுகள் விற்பனை செய்யப்பட்டதில் ரூ.10,90,000/– வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

இரண்டு அம்மா உணவகங்களும் உணவு தயாரிப்பதற்கு கீழ்க்கண்ட தேர்ந்தெடுக்கப்பட்ட 2 மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் உணவு தயாரித்து விற்பனை செய்கிறார்கள்.

1. செம்பருத்தி மகளிர் சுய உதவிக்குழு
அரசு தலைமை மருத்துவமனை, நாகப்பட்டினம்.

2. ஆவாரம்பூ மகளிர் சுய உதவிக்குழு
பழைய பேருந்து நிலையம் நாகப்பட்டினம்.

இரண்டுஅம்மா உணவகங்களும் 12 உறுப்பினர்கள் வீதம் 24 உறுப்பினர்கள் செயல்படுகின்றனர். இவர்களுக்கு நாள் கூலியாக ரூ.250/–வீதம் அந்தந்த மாத இறுதியில் வழங்கப்படுகிறது. உணவுப்பொருட்கள் மற்றும் காய்கறிகள் தமிழ்நாடு நுகர்பொருள் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை லிமிடெட், திருவாரூரிலும் எரிவாயு நாகப்பட்டினம் ஸ்ரீசாய் டொமஸ்ட்டிக் கேஸ் சப்ளையாகும். பால் Z46 **வெளிப்பாளையம் பால் உற்பத்தியாளர்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனம் நாகப்பட்டினத்தில்** வாங்கப்படுகிறது. அரிசி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், நாகையிலிருந்து வாங்கப்படுகிறது.

இரண்டு உணவகங்களிலும் 01–04–2020 முதல் 31–03–2021 முடிய ரூ. 25,05,835/– மட்டும் செலவிடப்பட்டுள்ளது. உணவுப்பொருட்கள் விற்பனை 01–04–2020 முதல் 31–03–2021 முடிய ரூ.10,90,000/–ஆகும். கூடுதல் செலவினம் ரூ. 14,15,835/– மட்டும் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடப்பட்டுள்ளது.

அரசு தலைமை மருத்துவமனை அம்மா உணவகத்தில் விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் வருவாயினை விட கூடுதல் செலவினத்தை அரசாணை நிலை எண். 118 ந.நி.ம.கு.வ. துறை (மா.ந.உ.) நாள் 26–09–2014ல் தெரிவித்தவாறு அரசு பொது மருத்துவமனையில் காப்பீடு மூலம் கிடைக்கும் வருவாயை கொண்டு ஈடு செய்ய வேண்டும். அவ்வாறு காப்பீடு வருவாய் போதுமான அளவு இல்லையென்றால் நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவுக்கான நிதியில் ( Directory Provision ) கூடுதல் ஒதுக்கீடு பெற்று மேற்கண்ட கூடுதல் செலவினத்தை ஈடு செய்ய வேண்டும் என தெரிவித்ததை தெரிவித்து அரசு தலைமை மருத்துவமனை கண்காணிப்பாளருக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது.

மருத்துவ முகாம்

நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட நகர் நல மையத்தில் குடிசைப்பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் மருத்துவ அலுவலர்களைக் கொண்டு மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. மேலும் தூய்மைப் பணியாளர்களுக்கான மருத்துவ முகாம் அமைத்து மருத்துவ முகாம் நடத்தப்பட்டது.

பாதாள சாக்கடைத் திட்டம்

மாவட்ட தலை நகரங்களில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்தப் படவேண்டுமென அரசு அறிவித்துள்ள உறுதி மொழியின்படி நாகப்பட்டினம் நகரில் பாதாள சாக்கடை திட்டத்தினை செயல்படுத்திட ஆய்வுப் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் மேற்கொள்ளப்பட்டு, இத்திட்டத்திற்கு ரூ.79.31 கோடிக்கு திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து பாதாள சாக்கடை திட்டப்பணிகளில் நாகப்பட்டினம் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் பணி முடிக்கப்பட்டு கழிவு நீர் குழாய் வீட்டு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. நாகூர் பகுதியில் உள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி முடிக்கப்பட்டு கழிவு நீர் குழாய் விட்டு இணைப்புகள் வழங்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பாதாள சாக்கடை கழிவு நீர் குழாய் இணைப்பு பெற முன் வைப்பு தொகை வசூல் செய்திட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் கழிவு நீர் குழாய் வீட்டு இணைப்புகள் நகராட்சி மூலம் வழங்குவதற்கு ரூ.447.60/– இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

கழிவு நீர் குழாய் வீட்டு இணைப்புகள் வழங்கப்பட்டு வருகிறது. 2020–21ம் ஆண்டு மார்ச்–31 வரை 5940 எண்ணிக்கையிலான இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

<u>HOUSING FOR ALL (அனைவருக்கும் வீடு கட்டும் திட்டம்)</u>

பாரத பிரதரின் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் இந்நகராட்சிப்பகுதிகளில் உள்ள வாடகை வீட்டில் குடியிருப்பு கோயில் இடம் , புறம்போக்கு, இடங்களில் உள்ளதை 36 வார்டுகளிலும் 36 கணக்கெடுப்பாளர்களை கொண்டு கணக்கெடுப்பு செய்தும், பொது மக்களிடமிருந்து 110 விண்ணப்பங்கள் பெறப்பட்டு அவைகள் குடிசை மாற்று வாரிய செயற்பொறியாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தீத்தடுப்புத் திட்டம்

தமிழக அரசின் தீ அணைப்புத் துறையினரால் நகரில் தீயணைப்பு பணிகள் செய்யப்பட்டு வருகிறது.

சிறு சேமிப்புத் திட்டம்

2020–2021ம் ஆண்டிற்கு சிறுசேமிப்புத் திட்டம் மாவட்ட ஆட்சியர், நாகப்பட்டினம் அவர்களால் இந்நகராட்சிக்கு ரூ.65,000/–க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

<u>வருவாய் தரத்தக்க இனங்கள்</u>

பொது

இந்நகராட்சியில் பணியாற்றும் பணியாளர்களுக்கு நகராட்சி காமராஜ் காலனியில் 16 வீடுகளும், பாரதி மார்க்கெட் காலனியில் 10 வீடுகளும் உள்ளன.

இந்நகராட்சியில் பணியாற்றும் எல்லா துப்புரவு பணியாளர்களும் அவர்களின் வாழ்க்கைத்தரத்திற்கேற்றவாறு எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன. துப்புரவு பணியாளர்களுக்கென நாகை மருந்துக் கொத்தளம் தெரு, முனிசிபல்பேட்டை ஆகிய பகுதிகளிலும், நாகூர் குயவர்தெரு பகுதியிலும் துப்புரவு பணியாளர்களுக்கு வீடுகள் உள்ளன.

போக்குவரத்து

இந்நகராட்சி எல்லைக்குள் நாகூர்,வெளிப்பாளையம் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய பகுதிகளில் இரயில் நிலையங்கள் அமைந்துள்ளன. இந்நகரத்திலிருந்து கோயமுத்தூர், எர்ணாகுளம் ,சென்னை, தஞ்சாவூர், திருச்சி ஆகிய தொலைதூர பயணத்திற்கு வசதியாக உள்ளது.

இந்நகராட்சி எல்லைக்குள் வெளிப்பாளையம் அறிஞர் அண்ணா புதிய பேருந்து நிலையம் ஒன்றும், நாகூரில் அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் ஒன்றும் ஆக இரண்டு பேருந்து நிலையங்கள் உள்ளன.

நாகப்பட்டினம் நகரத்திலிருந்து வெளியூர்களுக்கு செல்லும் பேருந்துகள், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம், அரசு விரைவு போக்குவரத்துக்கழகம் மற்றும் தனியாராலும் நடத்தப்பட்டு வருகிறது.

இந்நகரத்திலிருந்து சென்னை, திருவனந்தபுரம், பெங்களூர் , கன்னியாகுமரி, திருப்பதி, தூத்துக்குடி, மதுரை, கோயம்புத்தூர் , நாகர்கோயில், சேலம், பழநி, குளச்சல், வேலூர் இராமநாதபுரம், பாண்டிச்சேரி, சிதம்பரம், திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மயிலாடுதுறை ,வேதாரண்யம், ஆகிய தொலைதூர நகரங்களுக்கும் செல்கின்றன. குடந்தை அரசுபோக்குவரத்துத் துறையினரால் நகரப் பேருந்துகள் , நாகப்பட்டினம், நாகூர், வேளாங்கண்ணி, திருவாரூர், காரைக்கால், சிக்கல், எட்டுக்குடி, போன்ற அருகாமையில் உள்ள ஊர்களுக்கும் செல்கின்றன.

நகரமைப்புத் திட்டங்கள்

அரசு உத்திரவு எண் 650, நாள் 08.04.1975ன் படியும் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரக வளர்ச்சிச் சட்டம் 11(எ)ன்படியும் இந்நகராட்சிக்கு உள்ளூர் அமைப்பு திட்டக்குழு நியமிக்கப்பட்டு உள்ளது. நாகப்பட்டினம் நகரத் திட்ட பரப்பு சுமார் 5.49 மையில்களாகும். இந்த திட்ட பகுதியில் 11 பிரிவு அபிவிருத்தித்திட்டங்கள் உள்ளன.

<u>1. விரிவு அபிவிருத்தித் திட்டம் எண்1</u>

இத்திட்டம் 88.16 ஏக்கர் பரப்பளவு கொண்டது. அரசு வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை 1451 நாள் 15–12–1959–ல் அங்கீகரிக்கப்பட்ட திட்ட விதிகள் கடைபிடிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

<u>2. விரிவு அபிவிருத்தித் திட்டம் எண் 2</u>

இத்திட்டம் 121.80 ஏக்கர் பரப்பளவு கொண்டது. அரசு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை நாள் 15–12–1960–ல் அங்கீகரிக்கப்பட்டது. திட்ட விதிகள் கடைப்பிடிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

<u>3. விரிவு அபிவிருத்தித் திட்டம் எண் 3</u>

இத்திட்டம் அரசால் அங்கீகரிக்கப்பட்டு திட்டவிதிகள் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அரசாணை எண் 805, நாள் 27–03–1974.

4. <u>விரிவு அபிவிருத்தித் திட்டம் எண் 4</u>

விரிவு அபிவிருத்தித் திட்ட விதிகள் 17(2)1 மற்றும் 3ன்படியும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்திலும், நகராட்சி அலுவலகத்திலும் விளம்பரப்பலகையில் ஒட்டி 02–09–2003ல் விளம்பரம் செய்யப்பட்டது. இந்த விபரத்தினை மேல்நடவடிக்கைக்காக திருச்சி நகர ஊரமைப்பு இயக்குநருக்கு தெரிவிக்கப்பட்டது.

<u>5. விரிவு அபிவிருத்தித் திட்டம் எண் 5</u>

விரிவு அபிவிருத்தித் திட்டம் 17ன்படியும் 1971ம் வருடம் நகரமைப்புச் சட்டம் 29ன்படியும் படிவம் 12யை இதழில் பிரசுரிக்க படிவம் 12யை தினகரன் நாளிதழில் பிரசுரிக்கபட்டது. மேலும், தமிழ்நாடு அரசு இதழில் பிரசுரிக்கப்படிவம் 12யை சென்னை மத்திய அச்சக பணி மேலாளருக்கு அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

6. விரிவு அபிவிருத்தித் திட்டம் எண் 6

இத்திட்டம் 188.792 ஏக்கர் பரப்பளவு கொண்டது. அரசு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசாணை எண்.805, நாள் 27.03.1974ல் திட்டம் அங்கீகரிக்கப்பட்டது. திட்ட விதிகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

7. விரிவு அபிவிருத்தித் திட்டம் எண் 7

விரிவு அபிவிருத்தித் திட்டப்பணி 17–ன்படியும் 1971ல் வருடம் நகரமைப்புச் சட்டம் 29ன்படியும் படிவம் 12யை தினத்தந்தி நாளேட்டில் 20–09–1992 பிரசுரிக்கப்பட்டது. மேலும், தமிழ்நாடு அரசிதழில் படிவம் 12யை பிரசுரிக்க சென்னை அரசு மத்திய அச்சகப் பணி மேலாளருக்கு அனுப்பபட்டு நடவடிக்கையில் உள்ளது.

8. விரிவு அபிவிருத்தித் திட்டம் எண் 8

விரிவு அபிவிருத்தி திட்டப்பணி 17–ன்படியும் 1971–ல் வருடம் நகரமைப்புச் சட்டம் 29ன்படியும் படிவம் 12யை தினத்தந்தி நாளேட்டில் 20–09–1993ம் தேதி பிரசுரிக்கப்பட்டது. மேலும், தமிழ்நாடு அரசிதழில் படிவம் 12யை பிரசுரிக்க சென்னை அரசு மத்திய அச்சகப் பணி மேலாளருக்கு அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

9. விரிவு அபிவிருத்தித் திட்டம் எண் 9

இந்த இடம் 2,84,558 ஏக்கர் பரப்பளவு உள்ள டி.டி.பி/.டி.டி.டி.சி எண் 12/1990ல் வரைப்படம் ஒப்புதல் பெறப்பட்டு மேல் நடவடிக்கையில் உள்ளது. தினகரன் நாளிதழில்
20–05–1994ல் பிரசுரிக்கப்பட்டு தமிழ்நாடு அரசிதழில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தாமரைக்குளம் விரிவு அபிவிருத்திட்டம் பகுதி எண் 1.

இத்திட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் திட்ட விதிகளுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

தாமரைக்குளம் அபிவிருத்திதிட்டம் பகுதி எண் 2

இந்த திட்டம் 99.716 ஏக்கர் பரப்பளவு கொண்டது. இந்த திட்டம் அங்கீகரிக்கப்பட்டு திட்டவிதிகள் முறைப்படுத்தப்பட்டு வருகிறது.

கடற்கரை பகுதி கட்டுப்பாட்டுத் திட்டம் ( சி.ஆர்.இசட்)

இத்திட்டத்தின் கீழ் முறைப்படுத்துதல் பாதுகாப்புச் சட்டம் 1980ன்படி கடற்கரையிலிருந்து 500 மீட்டர் தூரத்திற்கு உள்ள பகுதிகள் ஒழுங்குபடுத்துதல் சம்பந்தமாக சர்வே அண்ணா பல்கலைக்கழகம் மூலம் எடுத்து நகர் ஊரமைப்பு துறை மூலம் அங்கீகரிக்கப்பட்ட வரைப்பட புல எண்கள் தயாரிக்கப்பட்டுள்ள தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது. ஆனால், அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்குப்படுத்தப்பட்ட கடற்கரை ஒழுங்கு படுத்துதல் பகுதி வரைப்படம் நகர் ஊரமைப்புத்துறையிடம் வரைபடம் பெற்று அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அரசு உத்திரவு எண் 650 நாள் 08–04–1975ன்படி தமிழ்நாடு நகர் மற்றும் ஊரக வளர்ச்சி சட்டம் 11(எ)ன்படியும் இந்நகராட்சிக்கு உள்ளூர் அமைப்புத் திட்டக்குழு நியமிக்கப்பட்டு உள்ளது.

இத்திட்ட பகுதியில் 11 அபிவிருத்தித் திட்டங்கள் உள்ளது. இதில் அங்கீகரிக்கப்பட்ட திட்டம் 1 முதல் 9 மற்றும் தாமரைக்குளம் விரிவு அபிவிருத்தி திட்டம் 1 முதல் 9 மற்றும் தாமரைக்குளம் விரிவு அபிவிருத்தித் திட்டம் எண் 1 மற்றும் திட்டம் எண் 2ல் திட்ட விதிகள் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

ஆக்கிரமிப்புகள் 2020–2021

ஆரம்பத்தில் எண்ணிக்கை : 33

நடப்பு ஆண்டில் அகற்றப்பட்டது : 28

கட்டிட மனுக்கள்

1. அறிக்கையாண்டில் வரப்பெற்ற மனுக்கள் : 171
2. முடிவு செய்யப்பட்டவை : 171
3. அனுமதிக்கப்பட்டவை : 133
4. அனுமதி மறுக்கப்பட்டது : 38

அனுமதி இல்லாமல் நடைபெறும் கட்டுமானம்

1. அனுமதியற்ற கட்டுமானங்கள் : 16
2. அதில் அனுமதி பெற்றவை : 8

மனைப்பிரிவுகள்

1. வரப்பெற்ற மனைப்பிரிவு விண்ணப்பங்கள் : Nil
2. நகர ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. : Nil
3. ஒப்புதல் பெறப்பட்டது : Nil
4. ஒப்புதல் நிலுவை : Nil

## வரி

சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டணம் 01–08–2003 முதல் கணிணி மயமாக்கப்பட்டு நகராட்சி அலுவலகத்தில் ரசீதுகள் கணினி மூலம் அளிக்கப்பட்டு வருகிறது.

### 2020–2021ம் ஆண்டு வசூல் விபரம்.

| வ.எண் | இனம் | கேட்பு | வசூல் | நிலுவை | சதவீதம் % |
|---|---|---|---|---|---|
| 1 | சொத்துவரி | 988.92 | 412.89 | 576.03 | 41.75% |
| 2 | தொழில் வரி | 197.54 | 96.82 | 100.72 | 49.01% |
| 3 | குடிநீர் கட்டணம் | 210.25 | 28.41 | 181.84 | 13.51% |
| 4 | வரியில்லா இனம் | 116.51 | 61.23 | 55.28 | 52.55% |
| 5 | பாதாள சாக்கடை இணைப்பு கட்டணம் | 135.94 | 21.61 | 114.34 | 15.89% |

வரியில்லா இனம்

இந்நகராட்சியில் பலன் தரத் தக்க இனங்களின் கீழ் ஓராண்டு குத்தகை இனங்களான பேருந்து நிலையக் கடைகள் காந்தி மார்க்கெட் கடைகள், ஆசாத் மார்க்கெட் கடைகள், பாரதி மார்க்கெட் கடைகள், காய்கறி மற்றும் மீன் மார்க்கெட் கடைகள், கட்டண கழிவறைகள் ஆகியவற்றின் மூலம் 2020–2021ம் ஆண்டில் கீழ்க்கண்ட விபரப்படி வருமானம் வரப்பெற்றது.

| வ.எண் | விபரம் | தொகை ரூ |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1 | பேருந்து நிலைய கட்டண வசூல் | 1334603 |
| 2 | மார்க்கெட் கட்டணம் வசூல் | 319500 |
| 3 | அடிக்கடை கட்டணம் வசூல் | 2407452 |
| 4 | ஆடு அறுக்கும் தொட்டி கட்டணம் வசூல் | 171630 |
| 5 | கட்டண கழிவறை கட்டணம் வசூல் | 2031364 |
| 6 | விழாக்களும், சந்தைகளும் | 0 |
| 7 | பலன் தரும் மரங்கள் | 9880 |
| 8 | நிலக்குத்தகை | 45537 |
| 9 | கடைகள் | 7488000 |
| 10 | பணியாளர்கள் குடியிருப்பு. | 28350 |
| 11 | வாகன பாதுகாப்பகம் | 718200 |
| | கூடுதல் | 1,45,54,516 |

நகராட்சி பராமரிப்பில் வாரச் சந்தைகள் ஏதும் இல்லை.

2020–2021–ம் ஆண்டின் வருடாந்திர குத்தகை இனங்கள் மூலம் ரூ.1,45,54,516/–மட்டும் வருவாய் பெறப்பட்டது.

மூலதனச்செலவுகள் விபரம்

| நிதி விபரங்கள் | தொகை ரூ |
|---|---|
| மூலதனச்செலவுகள் | 10,09,09,000 |
| பொது நிதி | 29,46,28,000 |
| குடிநீர் நிதி | 5,81,79,543 |
| ஆரம்ப கல்வி நிதி | 7,29,013 |
| மொத்தம் | 454,44,45,556 |

வரவுகளும், செலவுகளும்

| வ.எண் | நிதி | வரவு ரூ | செலவு ரூ |
|---|---|---|---|
| 1 | பொது நிதி | 8,17,84,000 | 10,62,31,648 |
| 2 | சேமநல நிதி | 1,66,32,678 | 88,95,842 |
| | மொத்தம் | 9,84,16,678 | 11,51,27,490 |

கடன்கள்

இந்நகராட்சியில் ஐ.டி.எஸ்.எம்.டி. திட்டத்தின்கீழ் பெறப்பட்ட கடன்களுக்கு அசல் மற்றும் வட்டித் தொகை முழுவதும் செலுத்தப்பட்டு விட்டது.

பாதாள சாக்கடை திட்டத்தின்கீழ் பெறப்பட்ட கடன் தொகை ரூ.8,20,60,000/–ல் அசல் தொகை ரூ.33,70,741/– ம் வட்டித்தொகை ரூ. 65,41,575/–ம் கூடுதல் தொகை ரூ. 99,12,316/– மட்டும் 2020–2021ம் நிதியாண்டில் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் மீதமுள்ள நிலுவைத் தொகையினை இந்நகராட்சியின் நிதி நிலைமைக்கேற்ப செலுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு நகர்புற நிதி கட்டமைப்பு மேம்பாட்டுக்கழகம் (TUFIDCO) சென்னை அலுவலகம் மூலம் IUDM திட்டத்தின் கீழ் பெறப்பட்ட வட்டியில்லா கடன் 8,80,00,000/– மட்டும் பெறப்பட்டதில் மாநில நிதிக்குழுவில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை ரூ. 7,80,00,000/– மட்டும் பிடித்தம்

செய்யப்பட்டுள்ளது . மீதமுள்ள தொகை ரூ.1,00,00,000/– ஐ நகராட்சியின் நிதி நிலைமைகேற்ப செலுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு நகர்புற நிதி கட்டமைப்பு மேம்பாட்டுக்கழகம் (TUFIDCO) சென்னை அலுவலகம் மூலம் பாதாள சாக்கடை கழிவு நீர் குழாய் அமைக்கும் பணிகளுக்கு (Provision of Internal Plumping) அனைத்து வீடுகளுக்கும் இணைப்பு வழங்கும் பணிக்காக வட்டியில்லா கடன் தொகை ரூ4,47,00,000/– மட்டும் அனுமதிக்கப்பட்டதில் மூன்று தவணைத்தொகை ரூ.3,35,25,000/– மட்டும் பெறப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தின் கீழ் பெறப்பட்ட கடன்களுக்கான அசல் தொகைகள் இதுவரை செலுத்தப்படவில்லை.

வழக்குகள்

| வ. எண் | வழக்குகள் | வரிமற்றும் வரியில்லா இனம் | இதர இனங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | 01.04.2020ம் தேதியில் நிலுவையாக இருந்த வழக்குகள் எண்ணிக்கை | 3 | 25 | 28 |
| 2 | அறிக்கையாண்டில் தொடரப்பட்ட வழக்குகள் | 2 | 3 | 5 |
| 3 | அறிக்கையாண்டில் முடிவு பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை | 0 | 6 | 6 |
| 4 | 31–03–2021ல் முடிவு செய்யப்பெறாமல் நிலுவையாக உள்ள வழக்குகளின் எண்ணிக்கை | 5 | 34 | 39 |

தணிக்கைத்தடைகள்

இந்நகராட்சியில் நடப்பு நிதியாண்டில் தணிக்கை 2018–2019 வரை முடிவடைந்துள்ளது. அறிக்கை ஆண்டில் 465 தணிக்கைத் தடைகள் நிலுவையில் உள்ளது. இத்தணிக்கைத் தடைகளை நிவர்த்தி செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மக்கள் சாசனத்தின் குறிக்கோள் :

1. சேவைகளை விரைவாகவும் தரமுடனும் அளித்தல்
2. சேவைகளை வழங்குவதற்கான கால அளவுகளைத்தெளிவாக அறிவித்தல்
3. நுகர்வோரின் நம்பிக்கை பெறும் வகையில் வெளிப்படையான நிர்வாகத்தை மேம்படுத்துதல்

பல்வேறு சேவை பணிகளுக்கும் கால அட்டவணைகள் மக்கள் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் சேவைகளை நிறைவேற்ற அனைத்து செயல்பாடுகளும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

தகவல் மையம்

மக்கள் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொது சேவைக்கான குறிக்கோள்களை விரைந்து நடைமுறைப்படுத்த ஏதுவாக நகராட்சியில் தகவல் மையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. தகவல் மையத்தின் மூலம் நகராட்சிக்கு பல்வேறு சேவைகள் தொடர்பாக வருவோருக்கு உரிய நேரத்தில் வழஙகப்பட்டு வருகின்றன. சொத்து வரி ரசீதுகள் 01–08–2003 முதல் கணினி மூலம் வழங்கப்பட்டு

வருகிறது. தகவல் மையம் மற்றும் கணிணி மையம் தோற்றுவிக்கப்பட்டதன் மூலம் நகராட்சியின் பொது சேவையின் செயல்பாடு மேம்பட்டுள்ளது.

கணிணிப்பிரிவு

நகராட்சியின் செயல்பாடுகள் அனைத்தையும் கணிப்பொறி மூலம் செயல்படும் திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்கு கணிப்பொறிகள் வழங்கப்பட்டு கணிப்பொறிகள் இயக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சியை பொறுத்த மட்டில் அன்றாட அலுவல்கள் அனைத்தும் தற்போது கணிப்பொறியிலேயே நகல் எடுக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. commr.nagapattinam@tn.gov.in என்ற இ.மெயில் முகவரி மூலம் நகராட்சியின் தகவல் பரிமாற்றங்கள் நடைபெறுகின்றன. மேலும் நகராட்சி மூலம் செய்யப்படும் திட்டப்பணிகள் ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மேல் உள்ளவை அனைத்தும் பிடிஎப் மூலம் இணையதளத்தில் http://municipality.tn.gov.in/tenders, ரூபாய் பத்து இலட்சம் மற்றும் பத்து இலட்சத்திற்கு மேல் உள்ளவை அனைத்தும் http://www.tenders.tn.gov.in என்ற இணையதளத்தில் வெளியிடப்படுகிறது. கணிணிப்பிரிவிற்கென்று உதவித் திட்ட அமைப்பாளர் ஒருவரும் மற்றும் புள்ளி விபரக்குறிப்பாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது நடைபெற்று வரும் திட்டப்பணிகள் விவரம்:.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | எடுத்துக்கொளளபட்ட பணிகளின் எண்ணிக்கை | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம் 2018–2019 | 55.00 | 2 | பணிகள் நடைப்பெற்றுவருகிறது. |
| 2 | நாகப்பட்டினம் நகராட்சியின் அக்கரை குளம் மேம்பாடு செய்திடும் பணி | 315.00 | 1 | பணி முடிவடைந்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. |
| 3 | மூலதன மானியத்திட்டம் 2017–2018 மற்றும் 2018–2019ன் கீழ் தாமரைக்குளம் மேம்பாடு செய்தல் | 125.00 | 1 | பணி முடிவுற்று 26.02.2021ல் பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. |
| 4 | நாகப்பட்டினம் நகராட்சி பாதாளசாக்கடை திட்டம் கழிவு நீர் குழாய் வீட்டு இணைப்புகள் சேம்பரிலிருந்துபாதாளசாக்கடை திட்ட குழாயில் இணைக்கும் பணி (7869 இணைப்புகள்) டூபிட்கோ நிறுவனத்தின் வட்டியில்லா கடன் | 447.60 | – | பணிகள்நடைப்பெற்று வருகிறது. |
| 5 | நாகப்பட்டினம் மற்றும் நாகூர் குப்பை கிடங்குகளில் உள்ள குப்பை குவியல்களை உயிரின செரிமான கொள்கலன் (Bio Mining) முறையிர் தரம் பிரித்து நிலத்தினை மீட்கும் பணி | 153.00 | 1 | நடைபெற்று வருகிறது. |
| 6 | தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (2019–2020) | 500.00 | 36 பணிகள் | பணிகள் நடைப்பெற்று வருகிறது. |
| 7 | பிரதான் மந்திரி ஜன் விகார் கார்யகிராம் திட்டம் 2019–20 | 140.00 | 1 | பணிகள் நடைபெற்று வருகிறது |

| | | | | |
|---|---|---|---|---|
| | (PMJVK 2019 –2020) நாகூர் பேருந்து நிலையத்தில் தர்காவிற்கு வந்துபோகும் யாத்ரீகர்கள் தங்குவதற்கான துயிர் கூடம்/சமுதாய கூடம் கட்டிடம் கட்டும் பணி | | | |
| 8 | பாராளுமன்ற உறுப்பினர் பகுதி மேம்பாட்டு திட்டம் 2019–20 வார்டு எண்–2 அமிர்தா நகரில் சமுதாய கூடம் கட்டிடம் கட்டுதல் | 30.00 | 1 | பணிகள் நடைபெற்று வருகிறது |
| 9 | தன்னிறைவு திட்டம் 2019–20ன் கீழ் கொடி மரம் பூங்கா மேம்பாடு செய்யும் பணி | 30.00 | 1 | பணி முடிவுற்றது. 26.02.2021ல் பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. |
| 10 | நாகப்பட்டினம் நகராட்சி குடிநீர் குழாய் வீட்டு இணைப்புகள் வழங்கிடும் பணி (10957 இணைப்புகள்) டூபிட்கோ நிறுவனத்தின் வட்டியில்லா கடன் | 380.00 | – | பணிகள் நடைப்பெற்று வருகிறது. |
| 11 | தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாடு திட்டம் 2020–2021 | 415.00 | 18 | பணிகள் நடைபெற்று வருகிறது |
| 12 | தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாடு திட்டம் 2020–2021 (கட்டம் – 2) | 450.00 | 29 | பணிகள் நடைபெற்று வருகிறது |

ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்ட பணிகள்

| எண் | பணியின் பெயர் | எடுத்துக் கொள்ளப்பட்ட பணியின் எண்ணிக்கை | மதிப்பீட்டு தொகை ரூ. லட்சத்தில் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | இலகுரக வாகனங்கள் (L.C.V) இரண்டு எண்ணிக்கைகள் வாங்குதல் | 1 | 15.00 | 05.03.2021ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது |
| 2 | பாதாள சாக்கடை திட்ட பணிக்கு மினி ஜெட் ராடிங் இயந்திரம் வாங்குதல் ( 1 எண்ணிக்கை) | 1 | 18.50 | |
| 3 | மரம் நசுக்குதல் மற்றும் தூலாக்குதல் இயந்திரம் வாங்குதல் (1 எண்ணிக்கை) | 1 | 17.00 | |

நாகப்பட்டினம் நகராட்சியில் பல்வேறு திட்டங்கள் கீழ் வளர்ச்சி பணிகளுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்ட விபரம்,

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடுகள் ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | நாகப்பட்டினம் பேருந்து நிலையம் மேம்பாடு செய்தல் | 150.00 |
| 2 | நாகூர் பேருந்து நிலையம் மேம்பாடு செய்தல் | 100.00 |
| 3 | புதிய கடற்கரை மேம்பாடு செய்தல் | 250.00 |
| 4 | சில்லடி கடற்கரை மேம்பாடு செய்தல் | 350.00 |
| 5 | இளஞ்சேகர் நகர் பூங்கா மேம்பாடு செய்தல் | 25.00 |
| 6 | கிரசனட் நகர் பூங்கா மேம்பாடு செய்தல் | 75.00 |
| 7 | வி.ஐ. பி நகர் பூங்கா மேம்பாடு செய்தல் | 85.00 |
| 8 | மகாலெட்சுமி நகர் பூங்கா மேம்பாடு செய்தல் | 30.00 |
| 9 | வண்ணான் குளம் மேம்பாடு செய்தல் | 265.00 |
| 10 | பச்சைபிள்ளையார் குளம் மேம்பாடு செய்தல | 95.00 |
| 11 | தேவநதி குறுக்கே பாலம் கட்டும் பணி | 350.00 |

நிவர் மற்றும் புரவி புயல் – 2020

நவம்பர் – 2020 மாதம் இறுதி மற்றும் டிசம்பர் – 2020 மாதம் முதல்வாரத்தில் நிவர் மற்றும் புரவி புயல் தாக்கம் ஏற்பட்டது. நாகப்பட்டினம் நகர்பகுதிகளில் அதிக அளவில் சேதங்கள் ஏற்படவில்லை நாகூர் தர்கா சுவர் இரண்டு பக்கம் இடிந்து விழுந்துவிட்டது.

தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு
அரும்பொருள் யாதொன்றும் இல். – குறள்.

பொருள்: செயலைப்பற்றி அறிந்த வல்லுனர்களுடன் சேர்ந்து ஆராய்ந்து சிந்தித்து ஒரு செயலைச் செய்யத்தொடங்கினால் வெற்றி சுலபத்தில் கிடைக்கும்.

அறிக்கையாண்டில் நகராட்சியின் பல்வேறு பணிகளையும் சீரோடும், சிறப்போடும் செயல்படுத்தி அதன் பயன்கள் பொதுமக்களுக்கு சென்றடைவதற்கு நகராட்சியின் பணிகளை நிறைவேற்றிட பணியாற்றி வரும் நகராட்சி பொறியாளர், நகர்நல அலுவலர், மேலாளர், இளநிலைப் பொறியாளர், நகரமைப்பு அலுவலர், நகரமைப்பு ஆய்வர்கள், நகர சார் ஆய்வாளர் ( Survey ), துப்புரவு ஆய்வர்கள், வருவாய் ஆய்வர்கள், சிறப்பு வருவாய் ஆய்வர் மற்றும் வருவாய் உதவியாளர்கள் உட்பட அனைத்து பிரிவு உள்(ம)வெளிப்புற பணியாளர்கள் அனைவருக்கும் பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஒம்) ந. ஸ்ரீதேவி,
ஆணையர் ,
நாகப்பட்டினம் நகராட்சி.

**<u>பதிவு அஞ்சல் ஒப்புதலுடன்</u>**

**<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை</u>**

| | | |
|---|---|---|
| அனுப்புநர்:<br>ந. ஸ்ரீதேவி,<br>ஆணையர் ,<br>நாகப்பட்டினம் நகராட்சி<br>மின்னஞ்சல் :<br>commr.nagapattinam@tn.gov.in<br>இணையதளம் :<br>http:municipality.tn.gov.in/nagapattinam | | பெறுநர்:<br>நகராட்சி நிர்வாக இயக்குநர்,<br>நகர் நிர்வாக அலுவலக வளாகம்,<br>ராஜா அண்ணாமலைபுரம்,<br>75, சாந்தோம் நெடுஞ்சாலை,<br>எம்.ஆர்.சி. நகர்,<br>சென்னை – 28 |

ந.க.எண். 4297/2021/ சி1 நாள். 25.10.2021

அய்யா,

| | |
|---|---|
| பொருள் | நிர்வாக அறிக்கை – நாகப்பட்டினம் நகராட்சி – 2020– 2021ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை அனுப்புதல் தொடர்பாக . |
| பார்வை | இந்நகர் தீர்மான எண். 123 நாள்: 30.09.2021 |

**************

இந்நகராட்சியின் 2020–2021ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மற்றும் பார்வையில் கண்டுள்ள நகர்மன்ற தீர்மான நகல் ஆகியவற்றினை இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆணையர்,
நாகப்பட்டினம் நகராட்சி.

**இணைப்பு :**

1. 2020 – 2021ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை –2 பிரதிகள்.
2. பார்வையில் கண்டுள்ள நகர்மன்ற தீர்மான நகல்

**நகல் பணிந்தனுப்பப்படுகிறது :**

1. மாவட்ட ஆட்சியர் நாகப்பட்டினம்.
2. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர்.

**நகல் :**

உதவி இயக்குநர்,
புள்ளியியல் துறை,
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,
நாகப்பட்டினம்.

## <u>நாகப்பட்டினம் நகராட்சி</u>

**2021ம் ஆண்டு செப்டம்பர் 30 –ம் நாள் நடைப்பெற்ற நாகப்பட்டினம் நகரமன்ற  சாதாரண கூட்ட நடவடிக்கையின் நகல்**

| | |
|---|---|
| பொருள் | இந்நகராட்சியின் 2020–2021ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை தயார் செய்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது. |
| அலுவலக குறிப்பு | மன்றம் பார்வையிட்டு அங்கீகரிக்கலாம் |
| தீர்மான எண். | 123 நாள் : 30.09.2021 |
| தீர்மானம் | அங்கீகரிக்கப்பட்டது. |

(ஒம்) ந. ஸ்ரீதேவி,
ஆணையர் மற்றும்
தனி அலுவலர்

//உண்மை நகல்//

ஆணையர்,
நாகப்பட்டினம் நகராட்சி